தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.07.2013**

**வெண்டை சாகுபடிக்கு முன் விதை நேர்த்தி அவசியம்**

வெண்டையை முளைப்பு திறன் அறிந்து, சாகுபடி செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. விவசாயிகள், வரும் ஆடிப்பட்டத்தில், காய்கறி பயிர்களை சாகுபடி செய்ய, தயார் நிலையில் உள்ளனர். சில விவசாயிகள், வெண்டையை தேர்வு செய்து, சாகுபடி செய்து வருகின்றனர்.

பூச்சி தாக்காத வீரிய ஒட்டுரக விதையின், விலை அதிகமாக உள்ளது. இது தரமாகவும், முளைப்பு திறன், 65 சதவீதம் இருப்பது அவசியம். இவைகளைப் பயன்படுத்தி, 45-க்கு 30 செ.மீ., இடைவெளி விட்டு நடவு செய்தால், நல்ல மகசூல் பெறலாம்.

எனவே, விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையைப் பயன்படுத்துவதற்கு முன், அதிலிருந்து 100 கிராம் எடையுள்ள விதையை, விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், என்ற முகவரிக்கு, ரூ. 30 கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும். பரிசோதனை முடிவுகளை பெற்ற பின், விதைப்பு மேற்கொண்டு பயனடைய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**வேளாண் அறிவியல் நிலைய குட்டைகளில் 2 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்க முடிவு**

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலைய குட்டைகளில் 2 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கத் திட்டமிட்டுள்ளதாக நிலையத் தலைவர் ஏ. சுரேஷ் தெரிவித்தார்.

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஏ.சுரேஷ், நிலையத்தில் மீன் வளர்ப்புக்கென உள்ள குட்டைகளை சனிக்கிழமை நேரில் பார்வையிட்டார். நிலையத்தில் ஏற்கெனவே மீன் வளர்ப்பு செய்யப்பட்டது குறித்தும், மீன் வளர்ப்புப் பயிற்சி மக்களுக்கு அளிப்பது குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் வளர்ப்புக்கென 5 குட்டைகள் உள்ளன. எல்லா குட்டைகளும் கான்கிரீட் முறையில் சுற்றுச்சுவர் எழுப்பி நல்ல முறையில் உள்ளன. இதில் ஒரு குட்டையில் மட்டுமே தற்போது மீன் வளர்க்கப்படுகிறது. இதைக் கொண்டே காரைக்காலைச் சேர்ந்தவர்களுக்கு மீன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிலையத்தில் உள்ள 5 குட்டைகளிலும் தண்ணீர் நிரப்பி பல்வேறு வகையான மீன் குஞ்சுகள் வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, கெண்டை மீன் வகைகளில் கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளி உள்ளிட்டவை வளர்ப்பு செய்யப்படும். ஒரு குட்டையில் தனியாக கெண்டையில் புதிய வகையான போட்லா என்கிற வகை வளர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவை மொத்தம் 2 லட்சம் குஞ்சுகள் விடப்படவுள்ளன. இதற்காக தமிழகத்தின் பல்வேறு பகுதியிலிருந்து மீன் குஞ்சுகள் வாங்கிவரப்படவுள்ளது. இதன் நோக்கமே, காரைக்கால் பகுதியினருக்கு மீன் வளர்ப்பு குறித்து நேரடி பயிற்சி அளிப்பதும், மீன்களை விற்பனை செய்வதன் மூலம் நிலையத்தின் வருவாயை உயர்த்துவதுமேயாகும்.

நிலையத்தில் சுமார் 60 ஏக்கர் நிலம் உள்ளது. சிறிய அளவு இடத்தைக்கூட பயன்படாத இடமாக வைத்திருக்காமல், பல்வேறு விதமான பயிர் உற்பத்தியில் நிலையத்தார் ஈடுபட வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உற்பத்திக்காகும் செலவுத் தொகை புதுச்சேரி அரசு மூலம் பெறப்படும் என்றார் சுரேஷ்.

**"விவசாயத்தை பாதிக்கும் மத்திய அரசின் தவறான கொள்கைகள்**

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால் விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேறி வருவதாக தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் கே.பாலகிருஷ்ணன் வேதனை தெரிவித்துள்ளார்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33 ஆவது மாநாடு, கடலூரில் நடக்க இருப்பதை முன்னிட்டு, போடியில் விவசாயிகள் சங்கக் கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்குக்கு மாவட்டச் செயலர் என். சுருளிநாதன் தலைமை வகித்தார். சி.பி.எம். கட்சியின் தாலுகா செயலர் எஸ்.கே. பாண்டியன் வரவேற்றார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் கே. ராஜப்பன் கருத்தரங்கை துவக்கிவைத்து பேசினார்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட சிதம்பரம் சட்டப்பேரவை தொகுதி உறுப்பினரும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவருமான கே. பாலகிருஷ்ணன் இந்திய விவசாயம் எதிர்நோக்கும் சவால்களும் - தீர்வுகளும் என்ற தலைப்பில் பேசியது:

அகில இந்திய விவசாயிகள் சங்கம், பல்வேறு கட்டங்களில் பல்வேறு போராட்டங்களை சந்தித்து வருகிறது. அதன் மூலம், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை ஏழை, எளிய மக்களுக்கு பெற்றுத் தந்துள்ளது. மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, கடந்த 10 ஆண்டுகளில் 8.75 லட்சம் விவசாயிகள் நிலத்தை இழந்து விவசாயக் கூலிகளாக மாறி விட்டனர்.

வரும் 10 ஆண்டுகளில் 80 லட்சம் விவசாயிகள் விவசாயத்தை விட்டு வெளியேறுவர் என அஞ்சப்படுகிறது.

நியாயமான விலை கிடைக்காததால் விவசாயத்தில் லாபம் கிடைக்காது. வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கமிட்டி பரிந்துரைகளை கிடப்பில் போட்டுள்ளது மத்திய அரசு. விவசாயிகளுக்கு உற்பத்தி பொருளுக்கு கட்டுப்படியான விலை வழங்க வேண்டும் என பரிந்துரை செய்த சுவாமிநாதன் கமிட்டி அறிக்கையை செயல்படுத்த மறுக்கிறது.

உரம் மற்றும் இடுபொருள்களின் விலை கடந்த மூன்று ஆண்டுகளில் மூன்று மடங்கு உயர்ந்து விவசாயிகளை வாட்டி வதைக்கிறது. ரூ.400}க்கு விற்ற காம்ப்ளக்ஸ் உரம் தற்போது ரூ.1080 வரை விற்கப்படுகிறது. இது போன்ற தவறான நடவடிக்கையால், இதுவரை 2.86 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்றார் அவர்.

கருத்தரங்கில் அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாட்டு நிதிக்காக, தேனி மாவட்டம் சார்பில் ரூ. 1 லட்சத்தினை கே. பாலகிருஷ்ணனிடம் மாவட்டத் தலைவர் டி.கண்ணன் வழங்கினார். மார்க்சிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் டி.வெங்கடேசன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்டச் செயலர் ஏ.வி.அண்ணாமலை, சங்கத்தின் மாவட்டப் பொருளாளர் எம்.வி.முருகன், மாநிலக்குழு உறுப்பினர் எம்.பாக்கியலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். போடி தாலுகா செயலர் எஸ்.செல்வம் நன்றி கூறினார்.

**விவசாயிகள் சங்க மாநாடு: வரவேற்பு குழுக் கூட்டம்**

அகில இந்திய விவசாயிகள் சங்க மாநாடு தொடர்பாக சிவகங்கையில் மாவட்ட வரவேற்புக் குழுக் கூட்டம் நகர்மன்றத் தலைவர் எம். அர்ச்சுனன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33 ஆவது மாநாடு கடலூரில் ஜுலை 24 முதல் 27 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதையொட்டி நடைபெற உள்ள விவசாயிகள் பேரணியில் சிவகங்கை மாவட்டத்தில் இருந்து 2000 விவசாயிகள் கலந்து கொள்ளவது என இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் மார்க்சிய கம்யூ. மாவட்டச் செயலர் ஆர்.கே. மாணிக்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் எல். ஆதிமூலம், மாவட்டப் பொருளாளர் கே. வீரபாண்டி, இடைக்கமிட்டிச் செயலர்கள் வி. மெய்ஞானமூர்த்தி, எ. முத்துராமலிங்கபூபதி, கே. அழகர்சாமி, ஐ. குருசாமி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் பி. வடிவேலு, பி. அய்யனார், பஞ்சவர்ணம், சாந்தி, மணியம்மா, குணசேகரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிவகங்கை ஒன்றிய செயலர் மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வறட்சி நிவாரணம்:விடுபட்ட விவசாயிகள் கோரிக்கை**

வெள்ளக்கோவிலில் வறட்சி நிவாரணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுபட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளக்கோவில் பகுதியில் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக தகுதியான விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மானாவாரி, தென்னை, பயறு வகைகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படுகிறது. பயனாளிகள் பட்டியலில் 40 சதவீத விவசாயிகள் பெயர்கள் இடம்பெறவில்லை.

வரப் பெற்ற பட்டியல்படி வழங்கப்படும் தொகையிலும் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன. கிராம நிர்வாக அலுவலகங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கூட்டம் அதிக அளவில் காணப்படுகிறது. விடுபட்ட விவசாயிகள் விண்ணப்பித்து நிவாரணம் பெற்றுக்கொள்ளலாமென, மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ் அறிவித்துள்ளார்.

ஆனால் கிராம நிர்வாக அலுவலகங்களில் இது நடைமுறையில் இல்லை. எனவே அனைத்துத் தரப்பினருக்கும் வறட்சி நிவாரணம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி**

நம்பியூர் அருகே விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டாரம், கூடக்கரை கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழக இறுதியாண்டு இளநிலை வேளாண்மை மாணவிகளின் கிராம தங்கல் திட்டத்தின் கீழ், வேளாண்மைக் கழிவிலிருந்து மண்புழு உரம் தயாரித்தலுக்கான பயிற்சி மற்றும் செயல்விளக்கம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

கூடக்கரை சிற்றுராட்சித் தலைவர் கே.பி.சண்முகசுந்தரம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சிவசாமி, பேராசிரியர் பிரசாந்த்ராஜன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் மோகனசுந்தரம் ஆகியோர் பங்கேற்றுப் பேசினர்.

மேலும், இயற்கை வேளாண்மை, அதனால் ஏற்படும் நன்மைகள், எளிய முறையில் வீட்டுக் கழிவுப் பொருள்களில் இருந்து உரம் தயாரிப்பது பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில், 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில், மண்புழு உர தயாரிப்பில் வெற்றியடைந்த ஊஞ்சப்பாளையத்தைச் சேர்ந்த விவசாயி மயில்சாமி அவரது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

பல்கலைக்கழக மாணவிகள் அபிநயா, ஜோதி, ஸ்ரீவைஷ்ணவி, தெரேசா அலெக்ஸ், வெற்றிக்கனி, யாமினி ஆகியோர் மண்புழு உரம் தயாரித்தல், இயற்கை வேளாண்மை மற்றும் வீட்டுக் கழிவுப் பொருள்களிலிருந்து உரம் தயாரித்தல் குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

**வந்தவாசியில் 20 மி.மீ. மழை**

வந்தவாசியில் சனிக்கிழமை இரவு 20 மி.மீ.மழை பெய்துள்ளது.

வந்தவாசி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சனிக்கிழமை மாலை முதல் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் இரவு 7 மணிக்கு மழை பெய்யத் தொடங்கியது. இம்மழை சுமார் அரை மணி நேரம் நீடித்தது.

பின்னர் லேசான தூறல் காணப்பட்டது. மேலும் ஞாயிற்றுக்கிழமை காலை பதிவான நிலவரப்படி 20 மி.மீ. மழை பெய்துள்ளது.

**விவசாயிகள் மாநாடு விழிப்புணர்வு மாரத்தான்**

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் சங்கம் சார்பில், மாவட்ட அளவிலான மினி மாரத்தான் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அகில இந்திய 33-ஆவது விவசாயிகள் மாநாடு வருகிற 24ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை கடலூரில் நடைபெறுகிறது. இந்த மாநாடு குறித்து விவசாயிகளிடமும், பொதுமக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டக் கிளை சார்பில் இளைஞர்கள் பங்கேற்ற மினி மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது.

வெண்ணந்தூர் ஒன்றியம், பொன்பரப்பிபட்டி முதல் தொட்டியப்பட்டி வரை நடைபெற்ற இந்த மினி மாரத்தான் போட்டியில், இளைஞர்கள் பலர் பங்கேற்றனர். போட்டியை மசக்காளிப்பட்டி கஸ்தூரிபா காந்தி கல்வி நிறுவனங்களின் தலைவர் க.சிதம்பரம் கொடியசைத்து தொடக்கிவைத்தார். வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

போட்டிகள் தொடக்க விழாவில் சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் எஸ்.கந்தசாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் ஏ.ரெங்கசாமி, கே.முருகேசன், சி.செல்வராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"வேளாண் துறையை மத்திய அரசு புறக்கணிக்கிறது**

வேளாண் துறையை மத்திய அரசு புறக்கணித்து வருவதால் நாடு கடும் நெருக்கடியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்றார் அகில இந்திய விவசாயிகள் சங்க மத்திய செயற்குழு உறுப்பினர் வெங்கடேஷ் ஆத்ரேயா.

கடலூரில் ஜூலை 24-ல் தொடங்கி நடைபெறவுள்ள விவசாயிகள் சங்க அகில இந்திய மாநாட்டையொட்டி புதுக்கோட்டையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிறப்புக் கருத்தரங்கில் அவர் பேசியது:

1950 முதல் 1990 வரை விவசாயத்தில் ஆண்டுக்கு 3 % காணப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் இந்திய விவசாயம் படிப்படியாக அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில் விதைகள் உள்ளிட்டவை சென்றதும், உரம் உள்ளிட்ட இடுபொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதும், மானியங்களை வெட்டுவதும், பன்னாட்டுச் சந்தையில் விலை உயர்வு, டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு உள்ளிட்ட காரணங்களால் இந்திய விவசாயம் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. இந்திய- அமெரிக்கா விவசாய அறிவுசார் ஒப்பந்தத்தக் குழுவில் வெளிநாட்டு, உள்நாட்டு பெருமுதலாளிகளே இடம்பெற்றுள்ளனர். ஒரு விவசாயி கூட சோ0க்கப்படவில்லை. இதுபோன்ற தவறான கொள்கைகளால் கடந்த 15 ஆண்டுகளில் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

நாட்டில் 6.70 கோடி ஏக்கர் தரிசு நிலங்கள் உபரியாக உள்ள நிலையில் 40 % குடும்பங்கள் நிலம் இல்லாமல் உள்ளனர் இந்த நிலையை மாற்ற விவசாய அமைப்புகளையும், விவசாயிகளையும், ஜனநாயக ஆர்வளர்களையும் ஒருங்கிணைத்து போராட வேண்டும் என்றார் ஆத்ரேயா.

மாநாட்டுப் பணிக்குழுத் தலைவர் எம். செபஸ்தியான் தலைமை வகித்தார். பொருளர் எஸ். சங்கர், முன்னாள் எம்எல்ஏ எஸ். ராஜசேகரன், நிர்வாகிகள் பி.

வீராச்சாமி, எம். உடையப்பன், கே.ஆர். சின்னையா, பி. மருதப்பா, டி.சலோமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாநாட்டு நிதி முதல் தவணையாக ரூ.50 ஆயிரம் வழங்கப்பட்டது.

**கீழணையில் 43 மி.மீ. மழை**

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகேயுள்ள கீழணையில் 43 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் சனிக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்): கீழணை 43, மஞ்சலாறு 13, திருவையாறு 12, தஞ்சாவூர் 7.2, திருவிடைமருதூர் 7, அய்யம்பேட்டை, கும்பகோணம் தலா 4, நெய்வாசல் தென்பாதி 3.4, பாபநாசம், வல்லம் தலா 3.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 52.90 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 52.90 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 41,867 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 3,001 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**உழவாரப் பணி**

கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் கோவிலில் மதுரையைச் சேர்ந்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை உழவாரப் பணி மேற்கொண்டனர். மதுரை ஓம் நமச்சிவாய உழவாரப் பணி இயக்கத்தைச் சேர்ந்த 20 பேர் உழவாரப் பணியை மேற்கொண்டு, பிரகாரங்களில் உள்ள செடிகளை அகற்றினர் விளக்கேற்றும் இடங்களையும்,

பக்தர்கள் திருநீறு கொட்டியுள்ள இடங்களையும் சுத்தம் செய்தனர். பின்னர் சுவாமிகளின் திருவாச்சிகளையும், பிரகாரங்களில் உள்ள சுவாமி சிலைகளையும் சுத்தம் செய்தனர்.

**விவசாயிகள் சிறப்புக் கருத்தரங்கம்**

அகில இந்திய விவசாய சங்கத்தின் அகில இந்திய மாநாட்டையொட்டி, திருநெல்வேலியில் சிறப்புக் கருத்தரங்கம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இச் சங்கத்தின் 33-வது அகில இந்திய மாநாடு கடலூரில் இம் மாதம் 24-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதையொட்டி விவசாயம்-வறுமை-வளர்ச்சி என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் திருநெல்வேலியில் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் பி. வேலுமயில் தலைமை வகித்தார். புரவலர் மருத்துவர் எஸ். ராமகுரு, வரவேற்புக் குழுத் தலைவர் தி. கருணாநிதி, வரவேற்புக் குழு பொருளாளர் பி. ஜெயராஜ், துணைத் தலைவர் ஆர். கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் எஸ். கருப்பசாமி வரவேற்றார்.

பத்திரிகையாளர் பி. சாய்நாத், கருத்துரை வழங்கினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலர் பெ. சண்முகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் கே.ஜி. பாஸ்கரன் ஆகியோரும் பேசினர். வரவேற்புக் குழுவை சேர்ந்த சி. சுரேஷ் நன்றி கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் 3 அடி உயர்வு**

கர்நாடகத்தில் காவிரியின் நீர்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் பலத்த மழை பெய்து வருவதால், அங்குள்ள அணைகளிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுகிறது.

அதிகபட்சமாக கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து நொடிக்கு 55 ஆயிரம் கன அடி வரை தண்ணீர் திறக்கப்படுகிறது. இந்த உபரிநீர் சனிக்கிழமை முதல் மேட்டூர் அணைக்கு வரத் தொடங்கியது. இதனால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 52.90 அடியாக இருந்தது. அணையிலிருந்து குடிநீருக்கு நொடிக்கு 3001 கனஅடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 19.68 டி.எம்.சியாக இருந்தது. இந்நிலையில் மேட்டூர் அணையின் நீர் வரத்து மேலும் 3 அடி உயர்ந்து 56.34 அடியாக உள்ளது. அனைக்கு விநாடிக்கு 30362 கனஅடி நீர் வரத்து உள்ளது.

**இன்று மழை பெய்ய வாய்ப்பு**

வடதமிழக மாவட்டங்களில் இன்று பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழகத்தின் சில இடங்களிலும் மழை பெய்யக் கூடும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. தென்மேற்கு பருவ மழையின் தாக்கம் மற்றும் வெப்பச் சலனம் காரணமாக மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. கடலூர், திருவாரூர், காஞ்சிபுரம், வேலூார், திருவள்ளூர், வால்பாறை, கோவை, ஸ்ரீபெரும்புதூர், விழுப்புரம், தஞ்சாவூர் உள்ளிட்ட இடங்களில் சனிக்கிழமை மாலையிலிருந்து மழை பெய்து வருகிறது.

வானிலை முன்னறிவிப்பு:

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், சேலம், கோவை, திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கடலூார், விழுப்புரம், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, வேலூார், திருவண்ணாமலை பெரம்பலூர், அரியலூர், கரூர், திருச்சி உள்ளிட்ட இடங்களில் திங்கள்கிழமை மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யும்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

கடலூர் - 50, தாம்பரம் - 40, திருத்துறைப்பூண்டி, திருவாலங்காடு, நெய்வேலி, திருவள்ளூர் - 30, சென்னை, மன்னார்குடி, வேலூர் மாவட்டம் சோளிங்கர், சிதம்பரம், மயிலம், தளி, புதுக்கோட்டை மாவட்டம் பெருங்கலூர், திருத்தணி, புதுச்சேரி - 20.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் காஞ்சிபுரத்தில் வியாழக்கிழமை நடந்தது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் சார்பில் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் காஞ்சிபுரத்தில் வியாழக்கிழமை நடந்தது. மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் கருத்தரங்கை தொடங்கி வைத்தார். குடிநீர் வடிகால் வாரிய உதவி இயக்குநர் அழகுவேல் பேசியது: ஊராட்சிப் பகுதிகளில் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி நீர் ஆதாரங்களைப் பெருக்க வேண்டும். நீர்நிலைகள் மாசுபடுவதை அறவே ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாயக்கழிவு நீர், பன்னாட்டு நிறுவனங்களின் கழிவுநீர் ஆகியன பாதுகாப்பற்ற முறையில் ஏரி, குளங்களில் கலந்து மாசுபடுவதைத் தடுக்க வேண்டும். ஏரி, கண்மாய், நீர்நிலைப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, வரத்துக் கால்வாய்களை சீர்செய்து மழைநீரை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வீடுகள்தோறும் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இக்கருத்தரங்கில் மழைநீர் சேகரிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து ஒலி, ஒளி காட்சிகள் மூலம் விளக்கமளிக்கப்பட்டது. இதில் 100-க்கும் மேற்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் கலந்துகொண்டனர்

**மாவட்டத்தில் மழை: தாம்பரத்தில் 40 மி.மீ.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக தாம்பரத்தில் 40 மி.மீ. மழை பதிவானது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர், உத்தரமேரூர், மதுராந்தகம், தாம்பரம், பல்லாவரம் உள்பட பகுதிகளில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பரவலாக நல்ல மழை பெய்தது.

பகலில் வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்த சூழ்நிலை நிலவியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் அதிகபட்சமாக தாம்பரத்தில் 40 மி.மீ. மழை பதிவானது. ஸ்ரீபெரும்புதூர், செய்யூர் ஆகிய பகுதிகளில் தலா 10 மி.மீ. மழை பதிவானது.

**தாம்பரத்தில் 40 மி.மீ. மழை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக தாம்பரத்தில் 40 மி.மீ. மழை பதிவானது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காஞ்சிபுரம், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர், உத்தரமேரூர், மதுராந்தகம், தாம்பரம், பல்லாவரம் உள்பட பகுதிகளில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பரவலாக நல்ல மழை பெய்தது.

பகலில் வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்த சூழ்நிலை நிலவியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் அதிகபட்சமாக தாம்பரத்தில் 40 மி.மீ. மழை பதிவானது. ஸ்ரீபெரும்புதூர், செய்யூர் ஆகிய பகுதிகளில் தலா 10 மி.மீ. மழை பதிவானது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.07.2013**

## வெங்காயம் விலை சரிவால் சாகுபடி செய்த விவசாயிகள் கவலை

ஆண்டிபட்டி:வெங்காயம் விலை சரிந்து வருவதால், தேனி மாவட்டத்தில் வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் ஆண்டிபட்டி, சித்தயகவுண்டன்பட்டி, பாலக்கோம்பை, சித்தார்பட்டி, தேனி சொக்கத்தேவன்பட்டி, சக்கரைப்பட்டி, பின்னத்தேவன்பட்டி, சின்னமனூர், ராயப்பன்பட்டி, காமாட்சிபுரம், வெள்ளையம்மாள்புரம் உட்பட பல பகுதிகளில் விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஆண்டு வறட்சியால் வெங்காயம் விளைச்சல் பாதிப்படைந்தது.

இதனால், வெங்காயம் விலை கடந்த சில மாதங்களாக தொடர்ந்து உயர்ந்தது. கிலோ 90 முதல் 100 ரூபாய் வரை விலை போனது. விலை உச்சத்திற்கு சென்றதால் சாகுபடியில் நாட்டம் கொண்ட விவசாயிகள் பலர், விதை வெங்காயத்தை கூடுதல் விலை கொடுத்து வாங்கி நடவு செய்தனர். கடந்த இரண்டு மாதத்திற்கு முன் நடவு செய்த வெங்காயம் தற்போது பலன் தரும் நிலைக்கு வந்துள்ளது.

இந்நிலையில், விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் மதுரை சந்தையில் 10 கிலோ கொண்ட சிப்பம் 300 முதல் 400க்கு விலை போனதாக வியாபாரிகள் தெரிவித்தனர். வெங்காய விவசாயிகள் கூறியதாவது:

வறட்சியால் வெங்காயம் சாகுபடி குறைந்தது. இதனால் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை தொடர்ந்து உயர்ந்து வந்தது. இறவை பாசன விவசாயிகள் கூடுதல் விலை

கொடுத்து விதை வெங்காயம் வாங்கி நடவு செய்துள்ளனர். தற்போது பலன் தரும் நிலையில் வெங்காய விலையில் ஏற்பட்டு வரும் சரிவு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது,என்றனர்.

வியாபாரிகள் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் நன்கு விளைச்சல் உள்ள காலங்களில் தினமும் 200 டன் வெங்காயம் வெளியூர்களுக்கு அனுப்பப்படும். கடந்த சில மாதங்களாக வரத்து குறைவால் வெங்காய விலை வரலாறு காணாத வகையில் சில்லரை விலையில் நூறு ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, மைசூரில் இருந்து வெங்காயம் தமிழக பகுதிக்கு வந்துள்ளது. இதனால் இங்கு விளையும் வெங்காயத்திற்கான விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. தற்போது விதை வெங்காயத்தை கூடுதல் விலை கொடுத்து வாங்கி நடவு செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

### நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு உரிய தொகையினை வழங்க மனு

சிவகாசி:இருக்கன்குடி அணை கட்டுவதற்காக. 1993ல், எட்டு கிராமங்களை சேர்ந்த விவசாய நிலங்களை, அரசு கையகப்படுத்தியது. கையகப்படுத்திய நிலங்களுக்கு அரசு வழங்கிய விலை போதுமானதாக இல்லை என, கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இவ் வழக்கில், சிலருக்கு, விலை நிர்ணயம் செய்தும், சிலருக்கு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. கோர்ட் உத்தரவுப்படி, நில உரிமையாளர்களுக்கு உரிய தொகையினை வழங்க வேண்டும் என, விவசாய சங்க தலைவர் ராஜேந்திரன் தலைமையில் கிராம மக்கள் 50 பேர் ,ஆர்.டி.ஓ., அலுவலகத்தில் மனு கொடுத்தனர். நிலங்களுக்கான தொகையை ஆகஸ்ட் 5ம்தேதிக்குள் வழங்காவிட்டால், மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம், என மனுவில் குறிப்பிட்டு உள்ளனர்.

## நாட்டுக்கோழி பண்ணை அமைக்க 25% மானியம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நாட்டுக்கோழி பண்ணை அமைக்க, 25 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு அரசு கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கோழி வளர்ப்பு திட்டத்தினை செயல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்க விருப்பமுள்ளவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் கோழிக்கொட்டகைகள் அமைப்பதற்கு ஏற்படும் செலவில், 25 சதவீத தொகை மானியமாக வழங்கப்படும்.மீதமுள்ள, 75 சதவீத தொகையை பயனாளிகள் தங்கள் சொந்த செலவிலோ அல்லது வங்கிகளிடமிருந்து கடனாகவோ பெற்றுக்கொள்ளலாம். மேலும், நாட்டுக்கோழியினை ஆண்டு முழுவதும் விவசாயிகள் வளர்க்க ஊக்கப்படுத்தும் வகையில் இரண்டாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் தமிழக அரசின் சார்பில், 50 சதவீதமும் மூன்றாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில், 30 சதவீதம் மானியமும் வழங்கப்படும். 250 கோழிகள் கொண்ட நாட்டுக்கோழிப்பண்ணை அமைக்கவும் மானியம் வழங்கப்படும்.இத்திட்டத்தில், விவசாயிகள், தனி நபர் தொழில் முனைவோர் மற்றும் சுய உதவிக்குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். இவர்களிடம் கோழிப்பண்ணைகள் அமைக்க போதிய நிலம் தங்கள் பெயரில் அல்லது குடும்ப உறுப்பினர் பெயரில் இருக்க வேண்டும். கோழி வளர்ப்பில் முன் அனுபவம் உள்ளவர்களும், ஏற்கனவே கொட்டகை அமைத்த பயனாளிகள் புதிய கொட்டகை அமைத்து கொள்ளவும் மற்றும் கோழிப்பண்ணை விரிவாக்கம் செய்திட ஆர்வமுள்ள விவசாயிகளும் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் ஐந்து நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும்.தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் அரசுடைமையாக்கப்பட்ட

வங்கியிலிருந்து கடன் வாங்குவதற்கு ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றிதழுடன் விண்ணப்பங்களை கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சமர்பித்து பயன்பெறலாம். இது குறித்து மேலும் விபரங்கள் அறிய விரும்புவோர் 04343-236573, 04344-244455 என்ற டெலிஃபோன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வாழையை தாக்கும் இலைப்புள்ளி நோய்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் அதிகம் உள்ளதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், முக்கனிகளில் சிறந்த கனியான மா அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. இதனையடுத்து முக்கனிகளில் மற்றொரு கனியான வாழை பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது.குறிப்பாக ஓசூர், தேன்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை மற்றும் தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியில், 2 ஆயிரத்து, 500 ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.பெரும்பாலும் ஜி.9 ரகத்தை சேர்ந்த பச்சை வாழை மற்றும் பூவாழை அதிக பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. சமீபகாலமாக திசு வளர்ப்பு மூலம் வளர்க்கப்படும் வாழை சாகுபடி அதிகரித்துள்ளது.சொட்டு நீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படும் திசு வாழை சாகுபடியில் ஒரு ஏக்கரில் 2 லட்சம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு கிடைக்கிறது. நாட்டு ரக வாழை சாகுபடியில் "சக்கர்ஸ்' எனப்படும் கிழங்கு மூலம் வாழை சாகுபடி செய்யப்படுகிறது.இவ்வாறு உபயோகப்படுத்தப்படும் கிழங்கில் நோய்கள் தாக்குதல் இருந்தால் அதிலிருந்து வளரும் புதிய செடிகளிலும் நோய் தாக்குதல் ஏற்படும். இந்த வகை வாழையில் நோய் எதிர்ப்பு தன்மை குறைந்து காணப்படுவதால் எளிதில் நோய்கள் பரவுகிறது.தற்போது தென்பெண்ணை ஆற்று

பகுதியல் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழையில் இலைப்புள்ளி நோய் தாக்குதலும், சிறு இலை வைரஸ் நோய் தாக்குதலும் அதிகம் காணப்படுகிறது. "சிக்கடோக்கா' எனப்படும் பூஞ்சையால் ஏற்படும் இலை புள்ளி நோய் தாக்கிய வாழை செடியில் இலைகள் கருகி செடிகள் அழியும் நிலையில் உள்ளது. இதனால் வாழை விளைசல் பெரிதும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் துறையினர் கூறியது:

பொதுவாக நாட்டு ரக வாழையில் மட்டுமே நோய் தாக்குதல் அதிகம் இருக்கும். "சக்கர்ஸ்' எனப்படும் ஒரு கிழங்கு மூன்று ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது. திசு வளர்ப்பில் ஒரு வாழை செடி, 15 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை குறைவாக கிடைப்பதால் பெரும்பாலான விவசாயிகள் கிழங்கை வாங்கி வாழை சாகுபடி செய்கின்றனர்.காற்றின் மூலம் பரவும் இலைப்புள்ளி நோய் தாக்கிய இலைகளை முற்றிலும் அகற்றி எரிக்க வேண்டும். மேலும், மோனோகுரோட்டோபாஸ் மற்றும் கார்பண்டாசிம் மருந்துகளை ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு கிராம் கலந்து நோய் பாதித்த இலைகளின் மேல் தெளிக்கலாம். அல்லது கார்பண்டாசிம் மாத்திரைகளை நோய்தாக்கிய வாழை மரத்தின் கிழங்கில் ஓட்டை போட்டு உள்ளே வைக்க வேண்டும். இந்த மருந்து தண்ணீரில் கரைந்து வேர்மூலம் சென்று நோயை கட்டுப்படுத்தும். அல்லது மருந்தினை ஊசி மூலம் கிழங்கில் செலுத்தலாம்."சிக்கடோக்கா' பூஞ்சைகள் காற்றில் பரவும் தண்மை கொண்டதால் ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாடு முறைகளை விவசாயிகள் கையாண்டால் மட்டுமே நோயை கட்டுப்படுத்த முடியும். நோய் தாக்குதல் அதிகம் இருந்தால் வாழை குலை போடுதல் கடுமையாக பாதிக்கப்படும்.இவ்வாறு கூறினர்.

## விவசாயத்துக்கு வண்டல் மண் எடுக்கலாம்கோரிக்கையால் திருச்சி கலெக்டர் உத்தரவு

திருச்சி: திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கடந்த, 28ம் தேதி கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நடந்தது. இந்த கூட்டத்தில் ஏரி, குளங்களில் வண்டல் மண் எடுக்கும் விவசாயிகளின் வாகனங்களை, போலீஸாரும், வருவாய்த்துறை அதிகாரிகளும் கைப்பற்றி, வணிக பயன்பாட்டிற்கு மண் எடுத்தாக கூறி, 25 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிப்பதாக விவசாயிகள் குற்றம்சாட்டினர். மேலும் விவசாய பயன்பாட்டிற்கு ஏரி, குளங்களில் இருந்து வண்டல் மண் எடுக்க, விவசாயிகளுக்கு அனுமதி கடிதம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.விவசாய பிரதிநிதிகள், வருவாய், பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு, இதற்கென்று தனியாக விதிமுறைகள் வகுக்கப்பட்டு, வண்டல் மண் எடுக்க அனுமதி வழங்கப்படும் என, அக்கூட்டத்தில் கலெக்டர் ஜெயஸ்ரீ அறிவித்திருந்தார்.

இதுதொடர்பாக கலெக்டர் ஜெயஸ்ரீ வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:இயற்கையில் மண்ணின் அமைப்பு, தரம், நீர்பிடிப்பு திறன், அயனிகள் மாற்றுத்திறன், அங்ககத் தன்மை, மண் வளம் போன்ற மண்ணின் இயற்பியல் மற்றும் பவுதீக குணங்களை மேம்படுத்துவதில், வண்டல் மண் முக்கிய பங்கு வகிக்கிறது.

குளங்களில் முழு கொள்ளளவிற்கு நீர் சேமிக்கப்பட்டிருந்தாலும், தூர்தல் காரணமாக, இக்குளங்களில் நீர்பிடிப்புத் திறன் ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வந்து, பயிர்க்காலம் முழுவதும் பாசனம் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது.குளத்து வண்டல் மண்ணை எடுத்து உபயோகிப்பதால், குளத்தின் நீர் பிடிப்புத் திறன், அதன் முழு கொள்ளளவிற்கும் மேல் அதிகரிப்பதோடு, பாசனப் பகுதிகளில் பயிர்காலம் முழுவதும் தட்டுபாடின்றி பாசன நீர் கிடைக்கச் செய்யலாம்.விவசாயி மனு செய்யவுள்ள வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஏரி

மற்றும் குளத்தின் பெயர், தேவைப்படும் மண்ணின் அளவு, எடுத்து செல்ல உள்ள இடத்தின் புல எண் விபரம் கம்ப்யூட்டர் சிட்டாவுடன், தேவைப்படும் நாட்களின் உரிய விபரங்கள், சம்மந்தப்பட்ட ஏரி, குளம் எந்தத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற விபரத்துடன், அந்த துறையினரின் ஆட்சேபணை இல்லாச் சான்று பெற்று, விண்ணப்பத்தை சம்மந்தப்பட்ட தாசில்தாரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.இந்த விண்ணப்பம் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனை செய்து அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முன்னுரிமை பதிவேடு பராமரிக்கப்பட்டு மனுதாரருக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்படும். அனுமதி வழங்கப்படவுள்ள ஏரியில், விவசாயி டிராக்டரில் மட்டுமே மண் எடுத்து செல்ல வேண்டும். ஒரு நபருக்கு குறிப்பிட்ட புலத்தில் அதிகபட்சமாக ஏக்கருக்கு, 30 யூனிட் மட்டுமே எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்படும்.அனுமதி வழங்கப்பட்ட புலத்தில் காலை, 7 மணி முதல் மாலை, 5 மணி வரை மட்டுமே மண் எடுத்து செல்ல அனுமதிக்கப்படும். மண் எடுத்துச் செல்லும் வாகனத்தில் வட்டாட்சியரின் அனுமதி கடிதம் வைத்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில், வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, அபராத நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.அனுமதி சீட்டு வழங்கப்பட்ட கால அளவிற்குள் பயன்படுத்தாத நிலையில், மீண்டும் அனுமதி, முன்னுரிமை உள்ளவர்களுக்கு அளித்த பின் தான் வழங்கப்படும். விவசாய பயன்பாட்டிற்கு, குளங்களில் நீர்பிடிப்பு இல்லாத காலங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும்.எனவே பொதுப்பணித்துறை, தாசில்தார், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் விதிக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வண்டல் மண் அள்ளப்பட வேண்டும்.

### விதையின் தரம் அவசியம்ஆய்வு கூட்டத்தில் தகவல்

கரூர்: "விதைப்பதற்கு முன்பே விவசாயிகள் தங்கள் வசம் வைத்துள்ள விதைகளின் தரத்தைத் தெரிந்து கொள்வது அவசியம்' என, கரூரில் நடத்த விதை மாதிரிகள்

குறித்த ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.கரூர் விதை பரிசோதனை நிலையத்தின், விதை மாதிரிகள் குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது. இதில் கோவை விதைச்சான்று இணை இயக்குனர் கோவிந்தராஜு தலைமை வகித்து ஆலோனைகளை வழங்கினார். விதை மாதிரிகளை வகை வாரியாக இலக்கு, சாதனை விவரங்களையும், ஆய்வகத்தின் விதை மாதிரிகள், ஆய்வு செய்யப்படும் முறைகளும், ஆய்வகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் ஆகியவைகளை ஆய்வு செய்யப்பட்டது.

பின் தங்கள் வசம் விதைப்புக்காக வைத்துள்ள விதைகளின் தரத்தை விதைப்பற்கு முன்பே தெரிந்து கொள்வது அவசியம். விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைக் குவியலிலிருந்து, 100 கிராம் விதை மாதிரி எடுத்து, ஒரு பையில் இட்டு, அத்துடன் துண்டுச் சீட்டில், பயிர், ரகம், குவியல் எண் ஆகிய விவரத்தை எழுதி, முகவரியுடன் கூடிய முகப்புக் கடிதத்தையும் ஒரு விதை மாதிரிக்கு, 30 ரூபாய் ஆய்வுக் கட்டணத்துடன் வேளாண் அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், 2வது குறுக்குத் தெரு, திண்ணப்பா நகர், காந்தி கிராமம், கரூர் என்ற முகவரியில் அனுப்பி, ஆய்வு முடிவை பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் விதை ஆய்வு துணை இயக்குனர் ரமேஷ்பாபு, உதவி இயக்குனர் சேகர் மற்றும் வேளாண் அலுவலர்கள் பங்கேற்றனர்.

## வேளாண் உற்பத்தி கமிஷனர் வருத்தம்தமிழகத்துக்கு தற்போதைய மழை போதாது

அரியலூர்: சோழமாதேவி கிராமத்தில் சொட்டு நீர் பாசன விழிப்புணர்வு முகாம் நடந்தது.அரியலூர் மாவட்டம், தா.பழூர் அருகே சோழமாதேவி கிராமத்தில் உள்ள கிரீடு வேளாண் அறிவியல் மைய வளாகத்தில் நடந்த, சொட்டு நீர் பாசன விழிப்புணர்வு கருத்தரங்கை, கலெக்டர் ரவிக்குமார் தலைமை வகித்து துவக்கி வைத்தார். கிரீடு வேளாண் அறிவியல் மைய இயக்குனர் நடனசபாபதி வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற, தமிழக அரசின் வேளாண்

உற்பத்தி கமிஷனர் மற்றும் தமிழக அரசின் கண்காணிப்பு அலுவலருமான சந்தீப் சக்சேனா பேசியதாவது:தமிழகத்தை பொறுத்தவரை தற்போது பெய்யும் மழை போதுமானதாக இல்லை. குறிப்பிட்ட காலகட்டத்தில் பெய்யும் அதிக மழைநீர் சேமிக்க வழியின்றி, கடலில் சென்று வீணாக கலக்கிறது. அந்த வகையில், 90 சதவீத மழை நீர் உரிய பாதுகாப்பு வசதியின்றி வீணாகிறது.இஸ்ரேல் நாட்டில் மிக குறைந்த அளவே மழை பொழிகிறது. ஆனால் அங்குள்ள வேளாண் தொழில்நுட்பம் காரணமாக, கிடைக்கும் சொற்ப தண்ணீரை கொண்டு, சொட்டு நீர் பாசனம் மூலம் தோட்டப்பயிர் விவசாயம் சிறப்பாக செய்யப்பட்டு, அங்கு உற்பத்தியாகும் காய்கனிகள், ஐரோப்பா கண்டத்தில் உள்ள பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட்டால் தான் நமக்கு போதுமான பாசன வசதி கிடைக்கிறது. அதனால் தான், 100 நாள் வேலை திட்டத்தின் மூலம், வேளாண் பொறியியல்துறை சார்பில், பண்ணை குட்டைகள் அமைக்கும் திட்டத்தை, தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. பண்ணை குட்டை அமைக்கும் திட்டத்தை, அரியலூர் கலெக்டர் மிகசிறப்பாக செயல்படுத்தி வருகிறார். ஒருங்கிணைந்த இயற்கை வேளாண்மை திட்டத்தை அனைத்து விவசாயிகளும் செயல்படுத்த வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.இவ்வாறு அவர் பேசினார்.முன்னதாக விழாவுக்கு தலைமை வகித்த அரியலூர் கலெக்டர் ரவிக்குமார் பேசியதாவது:விவசாயிகள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்காக வேளாண் துறையில் என்னென்ன திட்டங்கள் உள்ளனவோ, அவற்றை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி, மேம்பாடு அடைய செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், மாவட்ட நிர்வாகம் சார்பில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்ட விவசாயிகள் பண்ணை குட்டை அமைக்க, 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த விவசாய மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. அதன் மூலம் நடப்பு ஆண்டில், 300 விவசாயிகள் பயன் பெறவுள்ளனர்.இவ்வாறு கலெக்டர் பேசினார்.விழாவில்

அரியலூர் டி.ஆர்.ஓ., கருப்பசாமி, வேளாண் இணை இயக்குனர் குணசேகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சுப்பையா, கிரீடு வேளாண் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் நீலகண்டன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள், வேளாண் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### தேங்காய் கொள்முதல் நிலையம்விவசாயிகள் சங்கம் கோரிக்கை

மரக்காணம்:மரக்காணம் பகுதியில், தேங்காய் கொள்முதல் நிலையம் அமைத்து தரவேண்டும் என, விவசாயிகள் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.மரக்காணம் ஒன்றிய விவசாயிகள் சங்க செயலாளர் சுந்தரமூர்த்தி, தமிழக அரசின் விவசாயத் துறை அமைச்சருக்கு அனுப்பிய மனுவில், "மரக்காணம் ஒன்றியத்தில் 2,000 எக்டேரில், தென்னை விவசாயம் நடந்து வருகிறது. தானே, நீலம் புயல்கள் காரணமாக, கடந்த ஓராண்டாக தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், உற்பத்தி செய்யப்படும் தேங்காய்களுக்கு போதிய விலை இல்லாததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, மரக்காணம் பகுதியில் உடனடியாக தேங்காய் கொள்முதல் நிலையம் அமைத்து தரவேண்டும்' என, கேட்டுக் கொண்டுள்ளார்.

### திண்டிவனத்தில்52 மி.மீ, மழை

திண்டிவனம்:திண்டிவனத்தில் நேற்று முன்தினம் இரவு 52 மி.மீ., அளவு மழை பெய்தது.திண்டிவனத்தில் நேற்று முன்தினம் இரவு 8:00 மணிக்கு இடியுடன் கூடிய பலத்த மழை பெய் தது. தொடர்ந்து முப்பது நிமிடங்கள் மழை பெய்தது.பின்பு இரவு 10 மணியிலிருந்து 11 மணிவரை ஒரு மணி நேரம் மீண்டும் பலத்த மழை பெய்தது. மொத்தம் 52 மி.மீ, அளவு மழை பதிவானது.இந்த மழையின் காரணமாக நிலத்தை உழுவ தற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

## தென்பெண்ணை ஆற்றில் பாசன வாய்க்கால் சீரமைக்கப்படுமா?ஏரிகளில் தண்ணீரின்றி விவசாயிகள் அவதி

விழுப்புரம்:தென்பெண்ணை ஆற்றிலிருந்து ஏரிகளுக்கு செல்லும் வாய்க்கால், ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ளது. இதனால் பாசன ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து குறைந்து, விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.விழுப்புரம் அருகே செல்லும் தென்பெண்ணை ஆற்றிலிருந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஏரி மற்றும் ஆறுகளுக்கு தண்ணீர் செல்வதற்கு வாய்க்கால் உள்ளது. தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் வரும்போது, ஏரி மற்றும் ஆறுகளுக்கு இந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் செல்வது வழக்கம்.

இதனால், ஏரிகளில் தண்ணீர் நிரம்பி விவசாய நிலங்களுக்கு போதுமான அளவு பாசன வசதி கிடைத்து வந்தது.தற்போது, தென்பெண்ணை ஆற்றில் இருந்து ஏரி மற்றும் ஆறுகளுக்கு செல்லும் வாய்க்கால் பெருமளவில் தூர்ந்துபோய் உள்ளது. பல்வேறு பகுதிகளில் உள்ள வாய்க்கால்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. பல இடங்களிலும், தண்ணீர் செல்லும் வாய்க்கால் சிறிதாக மாறிவிட்டது.மழைக் காலங்களில் குறைந்தளவு தண்ணீர் மட்டுமே, ஏரிப்பகுதிகளுக்கு செல்லும் நிலை உள்ளது.ஆக்ரமிப்புகள்விழுப்புரம் அடுத்த நன்னாடு கிராமத்தில் உள்ள ஏரி மூலம் 100 ஏக்கர் பரப்பளவிலான நிலங்கள் பாசன வசதி பெற்றன. இந்த ஏரிக்கு எல்லீஸ்சத்திரம் தென்பெண்ணை ஆற்றிலிருந்து லட்சுமிபுரம், கோனூர் கிராமங்களின் வழியாக விழுப்புரத்தான் வாய்க்கால் மூலம் தண்ணீர் வர வாய்க்கால் வசதி உள்ளது.இந்த வழியாக, தென்பெண்ணை ஆற்றிலிருந்து தண்ணீர் வரும்பட்சத்தில், நன்னாடு ஏரி நிரம்பி இப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான, விவசாய நிலங்கள் பயன்பெற்று வந்தன.இந்த ஏரியிலிருந்து மற்றொரு வாய்க்கால் பிரிந்து, அருகிலிருக்கும் விராட்டிக்குப்பம், ஆலத்தூர் ஏரிகளுக்கு தண்ணீர் செல்வது வழக்கம். தற்போது, தென்பெண்ணை ஆற்றிலிருந்து வரும் விழுப்புரத்தான் வாய்க்கால் லட்சுமிபுரம்

பகுதியிலிருந்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.நீர்வரத்து பாதிப்புகடந்த சில ஆண்டுகளாக நன்னாடு ஏரிக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து தண்ணீர் வரத்து முற்றிலும் தடைபட்டுள்ளது. இதனால், நன்னாடு, விராட்டிக்குப்பம், ஆலத்தூர், வி.பாளையம் உள்ளிட்ட கிராம விவசாயிகள், ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே விவசாயம் செய்து வருகின்றனர்.ஆண்டிற்கு, மூன்று முறை விவசாயம் செய்து வந்த, இப்பகுதி விவசாயிகள் தற்போது தண்ணீர் வரத்து இல்லாததால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் உள்ள ஏரிகளில் தண்ணீர் வரத்து இல்லாததால், விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகின்றது. தற்போது, மழைக்காலம் துவங்குவதால், தென்பெண்ணை ஆற்றிலிருந்து, ஏரிப் பகுதிகளுக்கு செல்லும் தண்ணீர் வாய்க்கால்களை சீரமைப்பு செய்வதற்கு, மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுப் பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மஞ்சள் ஏலம்ஒத்திவைப்பு

ஆத்தூர்: ஆத்தூர், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு, மஞ்சள் வரத்து குறைந்ததால், ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை, உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, விற்பனை சங்கத்தில், மஞ்சள், பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளின் ஏலம் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், 130 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஏலத்துக்கு, மஞ்சள் வரத்து குறைந்ததால், வியாபாரிகள் யாரும், ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை. அதனால், மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

## மழையை நம்பி துளசி சாகுபடிகிராமப்புற விவசாயிகள் ஆர்வம்

சேலம்: சேலம் மாவட்டத்தில், பல இடங்களில் விவசாயிகள் மழையை நம்பி துளசி செடிகளை பயிரிட்டுள்ளனர்.வீடுகளில், முற்றத்தில் துளசி மாடம் அமைத்து வழிபடும் பழக்கமும் நம்மிடையே உள்ளது. துளசியை தினமும் பயன்படுத்தினால், சளி, இருமல் தொந்தரவு வராது. அனைத்து இடங்களிலும் பரவலாக விளையக்கூடியது துளசி.சமீபத்தில் ஏற்பட்ட வறட்சிக்கு துளசி செடிகளும் தப்பவில்லை. பல இடங்களில் தண்ணீரின்றி துளசி செடிகள் காய்ந்து நின்றது. இந்நிலையில், சேலம் மாவட்டத்தில் செட்டிச்சாவடி, விநாயகம்பட்டி, கொண்டப்பநாயக்கன் பட்டி போன்ற கிராமங்களில், சில விவசாயிகள் சமீபத்தில், பெய்த மழையை நம்பி துளசியை பயிரிட்டுள்ளனர். மழையினால், துளசி செடிகள் துளிர் விட்டு பச்சை பசேலென காட்சி தருகிறது. அனைவரின் வீட்டிலும் வளர்க்கப்பட்டு வந்த துளசி, இன்று வணிக நோக்கத்தில் பயிரிடப்படுகிறது.இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:துளசியில் கருந்துளசி, நல்ல துளசி என இரண்டு ரகங்கள் உள்ளன. இரண்டு ரகங்களுமே மேட்டுப்பாங்கான நிலங்களில், மழையை நம்பி வளரக்கூடியது.தற்போது, துளசி செடிகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. வயல்களின் ஓரம், வீட்டு தோட்டம் ஆகிய இடங்களில் துளசி செடிகள் வளர்க்கப்படுவது குறைந்து வருகிறது. இதனால், துளசி செடிகளை மற்ற பயிர்களை போல, பாதுகாப்புடன் சாகுபடி செய்து வருகிறோம். கோவில்களிலும், ஆயுர்வேதிக் மருந்தகங்களிலும் துளசி செடியை அதிகம் பயன்படுத்துகின்றனர்.தற்போது, பெய்து வரும் மழையை நம்பி, துளசி செடி பயிரிடப்பட்டுள்ளது. இதற்கு பலனும் கிடைத்துள்ளது. 15 நாட்களுக்கு ஒருமுறை, துளசி செடியில் இருந்து இலைகளை பறிக்க முடியும். போதுமான உரம், தண்ணீர் மற்றும் மழை நீர் கிடைத்தால், துளசி செடிகள் அதிக பலன் கொடுக்கும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## சாகுபடி பரப்பளவு 402 லட்சம் ஹெக்டேராக உயர்வு:சாதகமான பருவ மழையால்.

புதுடில்லி:நடப்பு ஆண்டு ஜூன் மாதம் துவக்கத்திலிருந்து, இதுவரையில், நாட்டின் பல மாநிலங்களில், தென்மேற்கு பருவமழை நன்கு பெய்து வருவதால், நடப்பு கரீப் பருவ வேளாண் சாகுபடியில், விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, மத்தியபிரதேசம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில், சாதகமான பருவமழையால், பல்வேறு தானியங்களின் சாகுபடி பரப்பளவு, பன்மடங்கு அதிகரித்துள்ளது என, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.எண்ணெய் வித்துக்கள்:சென்ற ஜூன் மாதம் வரையிலுமாக, உள்நாட்டில், சாகுபடி பரப்பளவு, 402 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

அதேசமயம், கடந்தாண்டின் இதே காலத்தில், பருவமழை குறைந்திருந்ததை அடுத்து, இவற்றின் சாகுபடி பரப்பளவு, 215 லட்சம் ஹெக்டேராக மிகவும் குறைந்து காணப்பட்டது. சென்ற வாரம் இறுதி வரையிலுமாக, எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், பருத்தி, நெல் ஆகியவற்றின் சாகுபடி பரப்பளவு பன்மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த, 12 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, கடந்த ஜூன் மாதத்தில், பருவமழை பொழிவு நன்கு இருந்ததையடுத்து, கடந்தாண்டை விட, இவ்வாண்டு சென்ற வார இறுதி வரையிலுமாக, 86 சதவீத அளவிற்கு சாகுபடி பணிகள் நிறைவடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு, கடந்தாண்டை விட, நான்கு மடங்கு அதிகரித்து, 26.52 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 110.27 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

மத்தியபிரதேசத்தில், பொதுவாக, 53.45 லட்சம் ஹெக்டேரில் சோயா சாகுபடி மேற்கொள்ளப்படும். இவ்வாண்டு, இதுவரையிலுமாக, 49.29 லட்சம் ஹெக்டேரில், சோயா சாகுபடி நிறைவடைந்துள்ளது. இது, 90 சதவீத அளவாகும்.சோயா சாகுபடி:கடந்தாண்டு பருவமழை பொய்த்ததால், இதே

காலத்தில், இம்மாநிலத்தில் இதன் சாகுபடி பரப்பளவு, 4.15 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் மிகவும் குறைந்திருந்தது.மகாராஷ்டிரா மாநிலத்திலும், சோயா சாகுபடி பரப்பளவு, இதே காலத்தில், 12.55 லட்சம் ஹெக்@டரிலிருந்து, 23.12 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

குஜராத் மாநிலத்தில், இவ்வாண்டு, தானிய உற்பத்தி, சோதனை அளவை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநிலத்தில், இது வரையிலுமாக, சராசரி அளவை விட மிக அதிகளவில் மழை பெய்துள்ளது.இம்மாநிலத்தில், இதுவரை, 14.09 லட்சம் ஹெக்டேரில், நிலக்கடலை சாகுபடி பணி நிறைவடைந்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 2.19 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் மிகவும் குறைந்திருந்தது.ஒட்டு மொத்த அளவில், நாட்டின் நிலக்கடலை சாகுபடி பரப்பளவு, 5.84 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 22.59 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.பஞ்சாப், சத்தீஸ்கர், அரியானா ஆகிய மாநிலங்களில், நெல் சாகுபடி செய்யும் பரப்பளவு, கடந்தாண்டை விட, 22 சதவீதம் அதிகரித்துள்ளது. பருப்பு வகைகள்:பருப்பு வகைகள் சாகுபடி பரப்பளவும், 4 மடங்கு அதிகரித்துள்ளது. கர்நாடகா மற்றும் உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இதன் சாகுபடி பரப்பளவு பன்மடங்கு அதிகரித்துள்ளது. கடந்தாண்டு பருப்பு வகைகளின் சாகுபடி பரப்பளவு, 3.99 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இது, தற்போது, 18.37 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.

மக்காச்சோளம், கம்பு, சோளம் மற்றும் கேழ்வரகு உள்ளிட்ட இதர தானியங்கள் சாகுபடி பரப்பளவும், 23 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 65.55 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது.பருத்தி:பருத்தி சாகுபடி பரப்பளவும், நடப்பு கரீப் பருவத்தில், 75 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளது. கடந்தாண்டின் ஜூன் மாதம் இறுதி வரையிலுமாக, 46.61 லட்சம் ஹெக்@டரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இது, தற்போது, 81.73 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது.குறிப்பாக,

மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, குஜராத் மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில், பருத்தி சாகுபடி பரப்பளவு, ஒட்டு மொத்த அளவில், இரண்டு மடங்கு அதிகரித்து, 46.61 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 81.73 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது என, வேளாண் அமைச்சகத்தின் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.07.2013**

**கால்நடை மருத்துவ முகாம்**

ஆத்தூர், : வேப்பம்பூண்டி கிராமத்தில் நடந்த கால்நடை மருத்துவ முகாமில் சிறப்பான முறையில் கால்நடைகளை பராமரித்து வரும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

தலைவாசல் ஒன்றியம் வேப்பம்பூண்டி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. மண்டல இணை இயக்குனர் ஜெயராமன் துவக்கி வைத்தார். உதவி இயக்குனர் சுந்தரராஜன் முன்னிலை வகித்தார். முகாமில் மருத்துவர் தேவேந்திரன் தலைமையில் உதவி மருத்துவர்கள் சாரதா, கோகிலராணி ஆகியோர் கொண்ட மருத்துவக்குழுவினர் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி, குடற்புழு நீக்க சிகிச்சை, ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகளை அளித்தனர்.

முகாமில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பெரம்பலுூர் ரோவர் வேளாண் கல்லுூரி மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். மேலும் சிறப்பான முறையில் கால்நடைகளை பராமரித்து வரும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.


**நிலுவை தொகை கேட்டு கரும்பு வயலில் கருப்புக்கொடி ஏற்றி விவசாயிகள் போராட்டம்**

கும்பகோணம் : நிலுவை தொகை கேட்டு கும்பகோணம் பகுதியில் 33 கிராமங்களில் விவசாயிகள் கரும்பு வயலில் கருப்புக்கொடி ஏற்றி போராட்டம் நடத்தினர்.
தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே திருமண்டங்குடி மற்றும் கோட்டூரில் தனியார் சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகிறது. இந்த ஆலைகளுக்கு கும்பகோணம், பாபநாசம் பகுதிகளில் உள்ள விவசாயிகள் கரும்புகளை பயிரிட்டு வழங்கி வருகின்றனர்.

கடந்தாண்டு அரைத்த கரும்புக்கு வழங்கப்பட வேண்டிய ஸீ92 கோடி விவசாயிகளுக்கு இதுவரை வழங்கவில்லை. இந்த தொகையை உடன் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த மாதம் திருமண்டங்குடி சர்க்கரை ஆலை முன்பு கரும்பு விவசாயிகள் தொடர் பட்டினி போராட்டம் நடத்தினர்.
இதைத்தொடர்ந்து கலெக்டர் பாஸ்கரன் ஆலை நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் ஜூன் மாத இறுதிக்குள் ஸீ45 கோடி, ஜூலை இறுதிக்குள் ஸீ35 கோடி, ஆகஸ்ட் மாதத்திற்குள் 12.64 கோடி 15 சதவீத வட்டியுடன் சேர்த்து தருவதாக ஆலை நிர்வாகத்தினர் எழுத்து பூர்வமாக அளித்தனர். இதனால் கரும்பு விவசாயிகள் போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டனர்.

ஆனால் ஆலை நிர்வாகம் ஜூன் மாத இறுதிக்குள் தருவதாக ஒப்புக்கொண்ட தொகையை காட்டிலும் வெறும் ஸீ3 கோடி மட்டும் வழங்கியுள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் ஒருபகுதியாக கும்பகோணம், பாபநாசம் தாலுகாவில் உள்ள 33 கிராம கரும்பு வயல்களில் விவசாயிகள் நேற்று கருப்பு கொடி ஏற்றினர்.
மருத்துவக்குடியில் கரும்பு வயலில் நடந்த போராட்டத்தில், விவசாயிகள் நாமம் போட்டு கொண்டு மேல்சட்டை அணியாமல் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**வினாடிக்கு 42 ஆயிரம் கனஅடி மேட்டூர் அணை நீர்மட்டம் 53 அடியை எட்டியது**



மேட்டூர் : கர்நாடக அணைகளில் இருந்து நீர் வரத்து அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணையின் நீர் மட்டம் 53 அடியை எட்டியுள்ளது. ஒரே நாளில் நீர்மட்டம் 5 அடி உயர்ந்துள்ளது. அணை வேகமாக நிரம்பி வருவதால் இம்மாத இறுதிக்குள் டெல்டா பாசனத்திற்கு நீர் திறக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

காவிரி நீர் பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அணையின் பாதுகாப்பு கருதி, விநாடிக்கு 53 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. கபினி அணைக்கு வரும் தண்ணீர் முழுவதும் உபரி நீராக அப்படியே வெளியேற்றப்படுகிறது. இந்த நீர் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணிக்கு ஒகேனக்கல்லுக்கும் மதியம் மேட்டூர் அணையை வந்தடைந்தது.  நீர் வரத்து படிப்படியாக அதிகரித்து மாலை யில் 30 ஆயிரம் கனஅடியை தாண்டியது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 41,867 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. நீர்வரத்து அதிகரிப்பால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் மளமளவென அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் 47.61 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 52.90 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் நீர் மட்டம் 5.29 அடி உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 19.68 டிஎம்சி. மேட்டூர் அணையில் இருந்து குடிநீர்

தேவைக்காக விநாடிக்கு 3001 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து இதே அளவில் இருந்தால், 2 வாரங்களில் நீர் மட்டம் 90 அடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இம்மாத இறுதிக்குள் டெல்டா பாசனத்திற்கு நீர் திறக்க வாய்ப்பு உருவாகியுள்ளது. சம்பா சாகுபடிக்கு முழுமையாக தண்ணீர் கிடைக்கும் என டெல்டா விவசாயிகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணையின் வலது கரையில் நீர் மட்டம் அளவிடும் பகுதியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மர்ம நபர்கள் ஊடுருவல்: மேட்டூர் அணைக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்ததால் பாதுகாப்பு பணி முன்னாள் ராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அணை யின் வலது கரை, இடது கரை, 16 கண் பாலம், அணைப்பூங்கா உள்ளிட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் முன்னாள் ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.
நீர் வரத்து அதிகரித்துள்ள நிலையில் பத்திரிகையாளர்கள் கூட மேட்டூர் அணைக்கு உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. இந்நிலையில் நேற்று முன்தினம் நீர்த்தேக்க பகுதியில் மஞ்சள் நிற காரில் மர்ம கும்பல் அணையின் வலது கரையில் முகாமிட்டு மது அருந்தி சென்றது. விஷமிகளும், சமூக விரோதிகளும் நீர்த்தேக்க பகுதியில் ஊடுருவும் வாய்ப்பு உள்ளது.

மூழ்க தொடங்கியது ஜலகண்டேஸ்வரர் கோயில்

நீர்மட்டம் 52 அடியாக உயர்ந்துள்ளதால், பண்ணவாடி பகுதியில் பயிரிடப்பட்டிருந்த சோளம், எள் பயிர்கள் நீரில் மூழ்கத் தொடங்கிவிட்டன.

இதனால், பயிர்கள் முழுமையாக விளையாவிட்டாலும், தீவனத்துக்கு பயன்படுத்துவதற்காக விவசாயிகள் அவற்றை அறுவடை செய்து வருகின்றனர். அணை வறண்டிருந்த போது முழுமையாக வெளியே தெரிந்த நந்தி சிலை, கிறிஸ்தவ இரட்டை கோபுரம், ஜலகண்டேஸ்வரர் ஆலயம் ஆகியவை தற்போது நீரில் மூழ்கத் தொடங்கி உள்ளன.

**வரத்து அதிகரிப்பால் உளுந்து, துவரம் பருப்பு விலை ரூ.300 வரை சரிவு**



விருதுநகர் : கர்நாடகாவில் பருவமழை பெய்ய துவங்கியதால், அம்மாநில விவசாரூ.களிடம் இருப்பில் உள்ள உளுந்து, துவரம் பருப்பு வெளிச்சந்தைக்கு விற்பனைக்கு வரத் துவங்கி உள்ளது. இதனால் உளுந்தம்பருப்பு மூட்டைக்கு ரூ.200 வரை விலை சரிந்துள்ளது. லயன் உளுந்து ரூ.4,200 லிருந்து ரூ.4,000 ஆகவும், பர்மா உளுந்து (பருவட்டு) ரூ.3,800 லிருந்து ரூ.3,600 ஆகவும், பர்மா உளுந்து பொடி ரூ.3,600 லிருந்து ரூ.3,400 ஆகவும், உளுந்தம்பருப்பு லயன் ரூ.5,800 லிருந்து ரூ.5,600 ஆகவும், தொளி உளுந்து ரூ.4,800 லிருந்து ரூ.4,600

ஆகவும் விலை குறைந்துள்ளது. அதே போல், குல்பர்க்கா துவரை ரூ.4,200 லிருந்து ரூ.3,900, பர்மா துவரை ரூ.3,600 லிருந்து ரூ.3,300, துவரம் பருப்பு லயன் ரூ.6,800 லிருந்து ரூ.6,500, பர்மா துவரம் பருப்பு ரூ.6,200 லிருந்து ரூ.5,900 என விலை சரிந்துள்ளது. நிலக்கடலைப்பருப்பு 80 கிலோ மூட்டை விலை ரூ.4,700 லிருந்து

ரூ.4,500 ஆக குறைந்துள்ளதால் கடலை எண்ணெய் டின் (15கிலோ) ரூ.1,700 லிருந்து ரூ.1,650 ஆகவும், பாமாரூ.ல் டின் ரூ.895 லிருந்து ரூ.885 ஆகவும் குறைந்துள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**08.07.2013**

**கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லையை வந்தடைந்தது அமைச்சர்கள் மலர் தூவி வரவேற்பு**

ஊத்துக்கோட்டை,

கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லையை வந்தடைந்தது. அமைச்சர்கள் மலர் தூவி வரவேற்றனர்.

<u>கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டம்</u>

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற தமிழக, ஆந்திர அரசுகள் கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தை தீட்டின. 1983–ம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்– அமைச்சர் எம்.ஜி.ஆர், ஆந்திர முதல் மந்திரி என்.டி. ராமாராவ் திட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இரு மாநில அரசுகள் கூட்டாக சுமார் ரூ. 1500 கோடி செலவில் கால்வாய் அமைத்தது. கண்டலேறு அணையில் இருந்து தமிழக எல்லை வரை 153 கிலோ மீட்டர் தூரத்துக்கு ஆந்திர அரசும் தமிழக எல்லையில் இருந்து பூண்டி ஏரி வரை 25 கிலோ மீட்டர் தூரத்துக்கு தமிழக அரசும் கால்வாய் அமைத்தது.

ஒப்பந்தப்படி ஆண்டு தோறும் 12 டி.எம்.சி. தண்ணீரை ஆந்திர அரசு தமிழகத்துக்கு திறந்து விட வேண்டும். ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 4 டி.எம்.சி., ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீர்

நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள சத்தியமூர்த்தி நீர் தேக்கத்துக்கு திறந்து விடவேண்டும்.

தண்ணீர் திறப்பதில் சிரமம்

பூண்டி ஏரியில் சேமித்து வைக்கப்படும் தண்ணீரை கொண்டுதான் சென்னையில் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. பூண்டி ஏரியின் மொத்த உயரம் 35 அடி. 3 ஆயிரத்து 231 மில்லியன் கன அடி தண்ணீரை சேமித்து வைக்கலாம். கிருஷ்ணா நதீ நீர் பங்கீட்டு திட்டத்தின் கீழ் ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்படும் நீர் மற்றும் மழை நீர் பூண்டி ஏரியில் சேமித்து வைத்து தேவைப்படும் போது புழல் ஏரிக்கு திறந்து விடப்படும். இந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஆந்திராவில் பலத்த மழை பெய்தது. இதனால் ஸ்ரீகாளாஸ்திரி அருகே உள்ள வரதயபாளையம் அருகே உப்பலமடுகு பகுதியில் கிருஷ்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டு இருந்த மதகு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது.

இதன் காரணமாக பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறப்பதில் சிரமம் ஏற்பட்டது. இது குறித்து தமிழக முதல்– அமைச்சர் ஜெயலலிதா, ஆந்திர முதல் மந்திரி கிரண்குமார்ரெட்டிக்கு கடிதம் எழுதினார். அதன்பேரில் மதகு உடைந்த பகுதியில் சுமார் ரூ.10 கோடி செலவில் புதிய மதகு அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

தண்ணீர் திறப்பு

அதன் பக்கத்தில் கிருஷ்ணா நதி நீர் பூண்டிக்கு வந்தடைய வசதியாக புதிதாக குழாய்கள் அமைக்கபட்டன. இந்த நிலையில் பூண்டி ஏரியில் தண்ணீர் இருப்பு குறைந்து வருவதால் சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக தமிழக முதல்– அமைச்சர் ஜெயலலிதா மீண்டும் ஆந்திர முதல் மந்திரி கிரண்குமார்ரெட்டிக்கு கடிதம் எழுதினார். கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி கண்டலேறு அனையில் இருந்து தண்ணீர் திறந்து விடும்படி

கடிதத்தில் கேட்டு கொண்டார். அதன் பேரில் தண்ணீர் திறந்துவிடும்படி கிரண்குமார்ரெட்டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கடந்த 1–ந் தேதி மாலை 4½ மணிக்கு கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விட்டனர்.

<u>மலர் தூவி வரவேற்பு</u>

வினாடிக்கு 200 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இது படிப்படியாக 500 கனஅடியாக உயர்த்தப்பட்டது. இந்த நீர் தமிழக எல்லை ஊத்துக்கோட்டை தாமரைகுப்பம் ஜீரோ பாயின்டை கடந்த வியாழக்கிழமை வந்தடையும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் கால்வாய் வறண்டு விட்டதால் தண்ண்ர் வரும் வேகம் குறைந்தது. ஒரு வழியாக நேற்று மாலை 4½ மணிக்கு தமிழக எல்லையை வந்தடைந்தது. தமிழக பத்திரப்பதிவுதுறை அமைச்சர் ரமணா, பால்வளத்துறை அமைச்சர் மூர்த்தி, பிற்படுத்தப்படோர் நலத்துறை அமைச்சர் அப்துல்ரகீம், திருவள்ளூர் மாவட்ட கலெக்டா வீரராகவராவ் ஆகியோர் மலர் துŁவி கிருஷ்ணா நதி நீரை வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் டாக்டர் வேனுகோபால் எம்.பி., பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் மணிமாறன், பொதுப் பணித்துறை தலைமை பொறியாளர் ஏமராஜ், செயற் பொறியாளர் மாதவன், உதவி பொறியாளர்கள் ராமசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம், ஆந்திர மாநில செயற்பொறியாளர் பிரதாப், திருவள்ளூர் ஆர்.டி.ஓ. அபிராமி ஆகியோர் கலந்து கொண்டனர். தண்ணீர் இன்று மாலை பூண்டி ஏரியை சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாட்டில் 21 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,300 கோடி வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது அமைச்சர் எஸ்.தாமோதரன் பேச்சு**

செய்யாறு,

தமிழகத்தில் 21 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.1300 கோடி வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.தாமோ தரன் தெரிவித்தார்.

**விவசாயிகள் மாநாடு**

திருவண்ணாமலை மாவட் டம் செய்யாறில் உழவர் தியா கிகள் தினம் மற்றும் விவசா யிகள் மாநாடு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இந்திய உழவர் உழைப்பாளர் கட்சி மாநில தலைவர் வேட்டவலம் மணி கண்டன் தலைமை தாங்கி னார். மாவட்ட செய லாளர் பாண்டுரங்கன் வரவேற்றார். மாவட்ட துணைத் தலைவர் கள் கருணாகரன், வரதராஜிலு, கரும்பு பிரிவு தலைவர் வேலு ஆகியோர் முன்னிலை வகித் தனர்.

சிறப்பு விருந்தினர்களாக தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிர மணியன், வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோ தரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் பேசியதாவது:

**ரூ.1300 கோடி நிவாரணம்**

தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா விவசாய மக்க ளின் எண்ணங்களை அறிந்து செயல்படுபவர். தமிழகம் முழுவதும் கடுமையான வறட் சியால் பாதிக்கப்பட்ட விவ சாயிகள் 21 லட்சம் பேருக்கு ரூ.1300 கோடி வறட்சி நிவார ணம் வழங்கி உள்ளார். டெல் டா மாவட்டத்தில் இறவை பாசனத்தில் சுமார் 1 லட்சம் ஏக்கரில் பயிர் செய்த விவசாயி களுக்கு 100 சதவீத மானியத் தில் உரம் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 16 ஆயிரம் கிராமங்களில் 1 மாத காலம் உழவர் பெருவிழா நடத்தி வேளாண் துறையின் திட்டங் களையும் தொழில் நுட்பங் களை விவசாயிகள் முழுமை யாக தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுக்கபட்டது.

5ஆண்டில் செய்ய வேண் டிய திட்டங்களை 2 ஆண்டு களில் செய்து முடித்து விட் டார். முதல் அமைச்சர் ஜெய லலிதவின் ஆட்சி திறமையை பார்த்து அவர் பிரதமராக வரவேண்டும் என்று இந்திய மக்களே விரும்புகிறார்கள்.முதல் அமைச்சர் ஜெய லலிதா பிரதமரானால் உலக நாடுகளில் இந்தியா முதலிடம் வகிக்கும்.

மேற்கண்டவாறு அவர் பேசினார்.

**அமைச்சர் சுப்பிரமணியன்**

அமைச்சர் முக்கூர் என்.சுப் பிரமணியன் பேசியதாவது:

தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா நீதிமன்றத்தின் மூலம் காவிரி நீரை பெற்று தந்து விவசாயத்தில் புரட்சி செய்து நாட்டின் முதுகெலும் பாக திகழும் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து உழ வர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப பல்வேறு வேளாண்மை திட்டங்களை தீட்டி செயல் படுத்தி வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

எம்.எல்.ஏ.க்கள் ஏ.கே.அரங்கநாதன், குணசீலன், ஜெயசுதா, எம்.ஜி.ஆர்.மன்ற செயலாளர் தருமலிங்கம் மற்றும் பலர் கலந்து கொண் டனர்.

**வாழப்பாடி கிளையில் ரூ.6 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

சேலம்,

சேலம் பள்ளப்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் வாழப்பாடி கிளையில் மஞ்சள் மூட்டைகள் ஏலம் விடப்பட்டன. இதற்காக சேலம் மாவட்டத்தின் வாழப்பாடி, சிங்கிபுரம், புதுப்பாளையம், பறவைக்காடு உள்பட பல்வேறு கிராமங்களில் இருந்து விவசாயிகள் 100 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

இதில் விரலி மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு(100கிலோ) குறைந்த பட்ச விலையாக ரூ.5,777 என்றும், அதிக பட்சமாக ரூ.7,099 என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டது. குண்டு மஞ்சள் குவிண்டாலுக்கு குறைந்த பட்ச விலையாக ரூ.4,899 என்றும், அதிக பட்ச விலையாக ரூ.6,329 என்றும், பனங்காலி குவிண்டாலுக்கு குறைந்த பட்ச விலையாக ரூ.9,699 என்றும், அதிக பட்சமாக ரூ.10,199 என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டது. நாமகிரிப்பேட்டை, சேலம், ஈரோட்டில் இருந்து வந்திருந்த விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். முடிவில் ரூ.6 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை ஆனது. விவசாயிகளுக்கு பணம் உடனடியாக பட்டுவாடா செய்யப்பட்டது.